**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 26.06.2025**
**OS. No. 102/2019**
**வழக்கு சாட்சி PW.1–மாதையன், த/பெ.பொன்னப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

10) தாவா 2 வது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள வண்டிப்பாதையின் திசை ஏதேனும் வழக்கு சொத்தில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் கிழமேலாக வண்டிப்பாதை செல்வதாக குறிப்பிட்டுள்ளோம். என் தந்தை 1977 ல் கிரையம் பெற்றபோது சுமார் 1 ஏக்கர் மட்டும் தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதன் பின்னர் நாங்கள் சர்வேயர் வைத்து அளந்தபோது 1 ஏக்கர் 2 சென்ட் நிலம் இருந்தது. அதனால் என் தந்தை எனக்கு தானசெட்டில்மெண்ட எழுதிவைத்தபோது 1.2 ஏக்கர் என்று எழுதி வைத்தார். மேற்கண்ட 1.2 ஏக்கர் நிலத்தை தவிர வேறு நிலம் எங்களுக்குஇல்லை என்றால், சரிதான். B செட்டியூலாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்து சுமார் 300 சதுரடி என்றால் சரிதான்.

2) என் தந்தை எனக்கு தானசெட்டில்மெண்ட எழுதி வைத்தபோது B செட்டியூல் சொத்தான வண்டிப்பாதை குறித்து எதுவும் குறிப்பாக குறிப்பிடவில்லை என்றால் வண்டி வாகனங்கள் செல்லலாம் என்று குறிப்பிட்டுள்ளது. வண்டிப்பாதை உண்மையாகவே இருந்திருந்தால் வண்டிப்பாதையின் திசைக்குறித்து குறிப்பாக தானசெட்டில்மெண்ட பத்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் என்றும், அவ்வாறு எந்த பாதையும் இல்லாததால் தான் ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட வண்டிப்பாதை குறித்து நான் விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான்.

3) தாவா A செட்டியூல் சொத்து சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.50/2019 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணம் தான் நான் தாக்கல் செய்த வழக்கின் பிராது நகல் என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கிலுள்ள சொத்தும், இந்த வழக்கு சொத்தும் ஒன்று தான் என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கில் கிழமேலாக 12 அடி அகலத்திலும், 25 அடி நீளத்திலும் வண்டிப்பாதை உள்ளதாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அந்த வழக்கு என்னுடைய சொத்தை அளந்து காட்ட மட்டும் கோரி தாக்கல் செய்துள்ளதால் சொல்லவில்லை.

4) மேற்கண்ட அ.வ.எண்.50/2019 ல் பிரதிவாதிகள் வண்டிப்பபாதையை தடுக்கிறார்கள் என்று ஏதேனும் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். குறிப்பாக B செட்டியூல் வண்டிப்பாதை என்று எதுவும் இல்லை என்றும், அவ்வாறு இருந்திருந்தால் மேற்கண்ட வழக்கிலும் அதை காண்பித்திருப்பேன் என்றால் சரியல்ல. அதேபோல் வண்டிப்பாதை இருந்திருந்தால் அதற்கு நான் தான் உரிமையாளர் என்று விளம்புகை பரிகாரமும் கோரியிருப்பேன் என்றால் சரியல்ல.

5) அ.வ.எண்.50/2019 வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி மனு செய்து அதன் பேரில் அவர் தாவா சொத்தை அளந்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிக்கை தான் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை என்றால் சரிதான். **அந்த அறிக்கையின் சார்வு நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் நான் வண்டிப்பாதையை அளக்ககோரி குறிப்பாணை கொடுத்ததாகவும், ஆனால் அவ்வாறு எந்த வண்டிப்பாதையும் இல்லை என்றும் அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். அந்த நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் நீதிமன்ற ஆணையர் கொடுத்த வரைபடமும், சர்வேயர் கொடுத்த வரைபடமும் ஒன்று போல் தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 மாதிரி வரைபடம் இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்த ஆவணம் என்றால் சரிதான். அந்த வரைபடத்தில் எது வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்று குறிப்பாக திசைகள் குறிப்பிடவில்லை என்றால்

சரிதான், அந்த வரைபடத்தில் பொட்டனேரி – மல்லிக்குந்தம் ரோட்டில் தான் வண்டிப்பாதை உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

6) பொட்டனேரி – மல்லிக்குந்தம் ரோடு எந்த திசையில் செல்கிறது என்று வா.சா.ஆ.6 வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தாவா சொத்திற்கு தென்மேற்கு பகுதியில் 13.6 மீட்டர் கிழக்காக வந்து, பின்னர் 8.4 மீட்டர் தெற்காக வளைவதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.6 மாதிரி வரைபடத்தில்குறிப்பிட்டுள்ளவாறு வண்டிப்பாதையானது நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் 13.6 மீட்டருக்கு வடக்குபக்கம் இருக்கவேண்டும் என்றால் சரிதான். என்னுடைய வா.சா.ஆ.6 மாதிரி வரைபடத்தின்படி வண்டிப்பாதை பிரதிவாதியின் நிலத்தில் வருகிறது என்றால் சரிதான்.

7) ச.எண்.37/3B ல் 2.5 ஏக்கர் நிலம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய வா.சா.ஆ.6 மாதிரி வரைபடத்திலும் மேற்கண்ட ச.எண்.37/3B ல் வண்டிப்பாதை உள்ளதாக குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் பிரதிவாதியின் நிலத்தில் வண்டிப்பாதை இருந்திருந்தால் ச.எண்.37/3B ஐ தனியாக வழக்கு சொத்தாக காண்பித்திருப்போம் என்றும், அவ்வாறு எதுவும் இல்லாததால்தான் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய நிருபண வாக்குமூலத்திலும், பிராதிலும் பிரதிவாதி நிலத்தில் தான் வண்டிப்பாதை உள்ளது என்று தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடமானது இல்லாத ஒரு வண்டிப்பாதையை பிரதிவாகளின் இடத்தில் உள்ளதாக காட்டி பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) பிரதிவாதிகள் என்னிடம் நிலத்தை கிரையம் கேட்டார்களா என்றால் கேட்டார்கள். என்ன விலைக்கு கேட்டார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து நீதிமன்ற ஆணையருக்கு முன்பாக பலமுறை அளக்கப்பட்டது. அவ்வாறு அளந்த சமயத்தில் பிரதிவாதிகள் என்னுடைய நிலத்தை ஆக்கிரமித்ததாக ஏதேனும் அறிக்கை கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை, அளந்து பார்த்தபோது பிரதிவாதிகள்

ஆக்கிரமித்தது தெரிந்து அவரை தடுத்தார்கள். என்னுடைய நிலத்தில் பிரதிவாதி 4 X 10 அடி ஆக்கிரமிப்பு செய்துள்ளார். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வழக்கு சொத்து அளந்து பார்க்கப்பட்டது என்றும், அப்போதுதான் பிரதிவாதி ஆக்கிரமித்தது தெரியவந்ததா என்றால் ஆமாம். அவ்வாறு ஆக்கிரமிப்பு உள்ள விவரத்தையோ, அந்த ஆக்கிரமிப்பை அகற்றி சுவாதீனம் ஒப்படைக்குமாறும் நான் அ.வ.எண்.50/2019 லும், இந்த வழக்கிலும் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், உண்மையாக ஆக்கிரமிப்பு இருந்திருந்தால் நான் வழக்கில் சொல்லி அதற்கான பரிகாரமும் கேட்டிருப்பேன் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக பரிகாரம் கேட்டுள்ளதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இல்லாத வண்டிப்பாதையை இருப்பதாக கூறி, தவறான வரைபடம் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் தான் வழக்கில் எங்களுடைய நிலத்தில் வண்டிப்பாதை இருப்பதாக தெரிவித்துவிட்டு தற்போது சாட்சியம் அளிக்கும் போது பிரதிவாதியின் இடத்தில் வண்டிப்பாதை உள்ளதாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், பிரதிவாதிகள் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும், நான் சொல்வதுபோல் தாவா B அயிட்ட சொத்தான வண்டிப்பாதை எதுவும் இல்லை என்றும் தவறான சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.